Source: *Tamil Murasu*, p3
Date: 29 March 2019

சமயம் சார்ந்த சிங்கப்பூரர்கள் பலர், சமயத்தால் சமூக ஒற்றுமை குலைக்க அனுமதிப்பதில்லை

# ஆய்வு: சமயம் ஒரு வலுவான செல்வாக்குமிக்க சக்தி

சிங்கப்பூரர்களில் பெரும்பாலோர் சமயம் சார்ந்தவர்களாக இருந்தாலும், சமூக ஒற்றுமையைக் குலைக்கும் விதத்தில் சமயம் தொடர்பான நடத்தை இருந்தால் அவர்கள் அதை அனுமதிப்பதில்லை என்று கொள்கை ஆய்வுக் கழகத்தின் ஆய்வு தெரிவித்துள்ளது.

வெவ்வேறு சமயக் கருத்துகள் இருந்தாலும் அவர்களுடன் அக்கம்பக்கத்தில் வசிப்பதை மக்கள் வெறுப்பதில்லை என்றும் ஆய்வாளர்கள் கண்டறிந்தனர்.

ஆனால், சிங்கப்பூரர்களில் ஒரு சிலர், சமய தீவிரவாதிகள் தங்கள் கருத்துகளை இணையத்தில் கூறுவதற்கும் அவர்களைப் பற்றி பொது இடங்களில் கூட்டம் நடத்தி பேசுவதற்கும் ஆட்சேபனை தெரிவிப்பதில்லை என்றும் நேற்று வெளியிடப்பட்ட ஆய்வு விவரிக்கிறது.

18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்ட பத்து இளையர்களில் சுமார் நால்வர் இத்தகைய கருத்துகள் வெளியிடப்படுவதை ஏற்றுக்கொள்கிறார்கள்.

காரணம், அவர்கள் பேச்சு சுதந்திரத்தை ஆதரிக்கிறார்கள் என்றும் ஆய்வாளர்கள் சொன்னார்கள்.

சமயத் தலைவர்கள் வெறுப்புணர்வையும் மற்ற சமயங்களுக்கிடையே வன்முறையைத் தூண்டி விடுதலையும் செய்யக்கூடாது என்பதை கிட்டத்தட்ட அனைவரும் ஒப்புக்கொண்டனர்.

"சமயம் என்பது ஒரு வலுவான, செல்வாக்குமிக்க ஒரு சக்தி. அது பொது மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் பல்வேறு விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது.

"சமயத்தின் பிரம்மாண்டமான முறையில் மக்களை எட்டக்கூடியது. அதன் செல்வாக்கைப் புரிந்துகொள்ளுதல், சமயங்களுக்கிடையே நிலவும் ஒற்றுமையைக் கட்டிக்காக்கவும் பொதுக் கொள்கையில் பொதுமக்களின் உணர்வுகளை அறிந்து கொள்ளவும் பெரிதும் உதவும்," என்றும் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல நாடுகளைச் சம்பந்தப்படுத்தும் சமயம் தொடர்பான அனைத்துலக ஆய்வின் ஒரு பகுதியாக, சிங்கப்பூரர்களின் எண்ணங்களை அறிந்துகொள்ளும் கொள்கை ஆய்வுக் கழகத்தின் இந்த ஆய்வறிக்கை வெளியாகி உள்ளது.

சிங்கப்பூர் குடியிருப்பாளர்கள் 1,800 பேர் இந்த உள்ளூர் ஆய்வில் பங்கேற்றனர்.



வெவ்வேறு சமயக் கருத்துகள் இருந்தாலும் அவர்களுடன் அக்கம்பக்கத்தில் வசிப்பதை மக்கள் வெறுப்பதில்லை என்றும் ஆய்வாளர்கள் கண்டறிந்தனர். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

அவர்களிடம் கருக்கலைப்பு, பொதுக் கொள்கை, சமய ஒற்றுமை போன்ற அம்சங்கள் பற்றி கேள்விகள் கேட்கப்பட்டன.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை மக்களுடன் நடத்தப்பட்ட நேர்காணல்கள் மூலமும் கருத்துகள் திரட்டப்பட்டன.

ஆய்வில் பங்கேற்ற பத்தில் எழுவர், வெவ்வேறு சமய பின்னணியைச் சேர்ந்த மக்கள் தங்களுடன் அக்கம்பக்கத்தில் வாழும் போது அவர்களுடன் நன்றாகப் பழக முடியும் என்று நம்புகிறார்கள்.

அப்படி இருந்தும், அவர்களில் 15 விழுக்காட்டினர் முஸ்லிம்கள் ஒருவித அச்சத்தை ஏற்படுத்துகிறார்கள் என்று நினைக்கிறார்கள்.

இது மற்ற சமய குழுக்களைக் காட்டிலும் வேறுபட்டதாகக் காட்டுகிறது என்றும் ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.